**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

**ஊடக அறிக்கை**

பெருந் தோட்டப் பகுதிகளில் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நுவரெலிய, டயகம மேற்குத் தோட்டத்தில் 150 வீடுகள் கையளிக்கப்பட்டன

ஜனவரி 20, 2019 அன்று நடைபெற்ற ஒரு விசேட வைபவமொன்றில், நுவரெலிய மாவட்டத்தின், டயகம மேற்குத் தோட்டத்தில், இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட 150 வீடுகள் பயனாளிகளுக்கு மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதி மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் கௌரவ. பழனி திகாம்பரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கௌரவ கயந்த கருணதிலக்க, விசேட துறை அபிவிருத்திக்கான அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் கௌரவ வி. இராதாகிருஷ்ணன் மற்றும் இலங்கைக்கான இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் டாக்டர். ஷிபல்க் என். அம்புலே ஆகியோரால் இணைந்து கையளித்து வைக்கப்பட்டன.

பாராளுமன்ற மற்றும் மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் பலர், பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை நிலைய உத்தியோகத்தர்கள், ஐ.நா ஹபிட்டாட், பிராந்தியப் பெருந்தோட்டக் கம்பனிப் பிரதிநிதிகள் மற்றும் டயகம மேற்குத் தோட்டத்திலிருந்து பெருமளவிலான மக்களெனப் பலரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

வைபவத்தின் போதான தனது உரையில், இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் புதிதாகக் கட்டப்பட்ட தனி வீடுகளின் பெருமை மிக்க உரிமையாளர்களை பாராட்டினார். இலங்கையில் இந்திய வீடமைப்புத் திட்டமானது US$350 மில்லியன்களுக்கும் அதிகமான தொகையுடன் (இலங்கை ரூபாய்களில் 50 பில்லியன்களை அண்மித்தது), வெளி நாடொன்றில் இந்தியாவின் மிகப் பெரியதான நன்கொடை உதவித் திட்டமாகும் எனக் கோடிட்டுக் காட்டினார். மொத்தம் உறுதியளிக்கப்பட்ட 63,000 வீடுகளில் ஏற்கனவே 47,000 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு முடிந்துள்ளன என்பதையும் அவர் நினைவுபடுத்தினார்.

இலங்கையின் அபிவிருத்தி முன்னுரிமைகளைப் பயனுறுவதில் இந்தியாவின் உறுதுணையை வெளிப்படுத்திய அவர், கூடுதலான அமைதி மற்றும் சுபீட்சம் நோக்கிய பயணத்தில் இலங்கை மக்களுடன் பங்குகொள்வதில் இந்தியாவின் பற்றுறுதியையும் மீள்வலியுறுத்தினார்.

****

கொழும்பு
ஜனவரி 20, 2019